சுருக்கம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110–இன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் – 2015–2016 ஆம் கல்வியாண்டில் 15 ஆதி திராவிடர் நல மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 7) துறை

அரசாணை (நிலை) எண். 13 நாள் 21.01.2016

மன்மத, தைத் திங்கள் 7 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்கப்பட்டது:–

ஆதி திராவிடர் நல இயக்குநரின் கடித ந.க.எண். க2/12348/2015, நாள் 05.10.2015.

******

ஆணை :

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 27.08.2015 அன்று சட்டமன்றப் பேரவையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை தொடர்பாக சில அறிவிப்புகளை வெளியிட்டார்கள். அவற்றில் கீழ்க்கண்ட அறிவிப்பும் ஒன்றாகும்:--

> "நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, தங்கள் இருப்பிடத்திற்கு அருகிலேயே பள்ளிக்கல்வியை தொடர ஏதுவாகவும், இடைநிற்றலை தவிர்க்கும் நோக்குடனும், வரும் கல்வியாண்டில் 15 ஆதி திராவிடர் / பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாக ரூ.2,40,00,000/– செலவில் நிலை உயர்த்தப்படும்."

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பாக மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் ஆதிதிராவிடர் நல இயக்குநர் அரசுக்கு அனுப்பிய கருத்துருவில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் 105 ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளிகளும் மற்றும் 59 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளிகளும் செயல்பட்டு வருகின்றன என்றும், இப்பள்ளிகளில் 21057 மாணவ / மாணவியர்கள் பயின்று வருகின்றனர் என்றும், இவர்கள் அனைவரும் உயர்கல்வி பயில தங்களது இருப்பிடத்திற்கு வெகு தொலைவில் உள்ள பள்ளிகளுக்கு செல்லும் நிலை ஏற்படுகிறது என்றும், இதனால் காலவிரயமும் பண விரயமும் ஏற்படுகிறது என்றும், 8 ஆம் வகுப்பு பயின்று வேறு பள்ளிகளில் 9 ஆம் வகுப்பில் சேர விரும்பும் மாணவர்கள் தங்களது இருப்பிடத்திற்கு அருகே உயர்கல்வி பயிலவேண்டும் என்ற நோக்கத்திற்காக இத்துறை பள்ளிகளை நிலை உயர்த்தும் அவசியம் ஏற்படுகிறது என்றும் தெரிவித்து, அந்த அடிப்படையில் 2015–2016 ஆம்

கல்வியாண்டில் 15 ஆதி திராவிடர் நல மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், ஆதி திராவிடர் நல இயக்குநர் தனது கடிதத்தில், நிலை உயர்த்தக்கருதும் 15 நடுநிலைப் பள்ளிகளிலும் ஏற்கெனவே உள்ள நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடத்தை உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடமாக ரூ.9300-34800 + தர ஊதியம் ரூ.4800 என்ற ஊதிய விகிதத்தில் நிலை உயர்த்தி ஆணையிடுமாறும், மேலும், பள்ளிக்கல்வித்துறையைப் போல் ரூ.9300-34800 + தர ஊதியம் ரூ.4600 என்ற ஊதிய விகிதத்தில் ஒரு பள்ளிக்கு 5 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் (தமிழ்-1, ஆங்கிலம்-1, கணிதம்-1, அறிவியல்-1, சமூக அறிவியல்-1) வீதம் 15 பள்ளிகளுக்கு 75 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள், ரூ.9300-34800 + தர ஊதியம் ரூ.4500 என்ற ஊதிய விகிதத்தில் ஒரு பள்ளிக்கு ஒரு துவக்கப் பள்ளி தலைமையாசியர் பணியிடம் வீதம் 15 பள்ளிகளுக்கு 15 துவக்கப்பள்ளி தலைமையாசியர் பணியிடங்கள் தோற்றுவிக்கலாம் என்றும் துவக்கப்பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களைப் பொறுத்தவரையில் ரூ.5200-20200 + தர ஊதியம் ரூ.2800/- என்ற ஊதிய விகிதத்தில் அப்பள்ளியில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள இரண்டு இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் ஒரு இடைநிலை ஆசிரியர் பணியிடத்தினை துவக்கப்பள்ளி தலைமையாசிரியர் பணியிடமாக நிலை உயர்த்தலாம் என்றும், ரூ.5200-20200 + தர ஊதியம் ரூ.2400/- என்ற ஊதிய விகிதத்தில் ஒரு பள்ளிக்கு ஒரு இளநிலை உதவியாளர் பணியிடம் வீதம் 15 பள்ளிகளுக்கு 15 இளநிலை உதவியாளர் பணியிடங்கள், ரூ.5200-20200 + தர ஊதியம் ரூ.2400/- என்ற ஊதிய விகிதத்தில் ஒரு பள்ளிக்கு ஒரு தட்டச்சர் பணியிடம் வீதம் 15 பள்ளிகளுக்கு 15 தட்டச்சர் பணியிடங்கள், ரூ. 4800-10000 + தரஊதியம் 1300 என்ற ஊதிய விகிதத்தில் ஒரு பள்ளிக்கு ஒரு அலுவலக உதவியாளர் பணியிடம் வீதம் 15 பள்ளிகளுக்கு 15 அலுவலக உதவியாளர் பணியிடங்கள், ரூ. 4800-10000 + தரஊதியம் 1300 என்ற ஊதிய விகிதத்தில் ஒரு பள்ளிக்கு ஒரு காவலர் பணியிடம் வீதம் 15 பள்ளிகளுக்கு 15 காவலர் பணியிடங்கள் மற்றும் ரூ. 2500-5000 + தரஊதியம் 500 என்ற ஊதிய விகிதத்தில் ஒரு பள்ளிக்கு ஒரு துப்புரவாளர் பணியிடம் வீதம் 15 பள்ளிகளுக்கு 15 துப்புரவாளர் பணியிடங்கள், ஆகிய பணியிடங்களை இப்பணியிடங்கள் நிரப்பப்படும் நாளிலிருந்து ஓராண்டுக்கு தற்காலிகமாக தோற்றுவித்து ஆணை வெளியிடுமாறும் ஆதி திராவிடர் நல இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

4. மேலும், நிலை உயர்த்தப்பட உள்ள 15 உயர்நிலைப் பள்ளிகளில், ஒரு பள்ளிக்கு ஓர் ஆண்டிற்கு ஊதியம் மற்றும் இதரப்படிகளுக்காக ரூ. 51,64,188/- வீதம் 15 பள்ளிகளுக்கு ரூ.7,74,62,820/- தொடரும் செலவினம் ஏற்படும் என்றும், கட்டிடப்பணிகள் மற்றும் மரச்சாமான்கள், இயந்திரம், கணிப்பொறி இயந்திரம் போன்றவை வாங்குவதற்காக ரூ.8,27,75,280/- (ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் ரூ.50,99,552 x 9 = ரூ.4,58,95,968, பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் ரூ.61,46,552 x 6 = ரூ.3,68,79,312) தொடராச் செலவினம் ஏற்படும் என்றும்ஆதி திராவிடர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

5. ஆதி திராவிடர் நல இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமுடன் ஆய்வு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில், கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது:-

I. இந்த ஆணையின் இணைப்பு – I-இல் உள்ளவாறு 15 நடுநிலைப் பள்ளிகள் (9 ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளிகள் + 6 பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளிகள்) 2015-2016 ஆம் கல்வியாண்டில் உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படுகின்றன.

II. நிலை உயர்த்தப்படும் 15 நடுநிலைப் பள்ளிகளில் ஏற்கெனவே உள்ள நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்கள் ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.4800 என்ற ஊதிய விகிதத்தில் உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களாக நிலை உயர்த்தப்படுகின்றன.

III. நிலை உயர்த்தப்படும் 15 பள்ளிகளில், ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.4600 என்ற ஊதிய விகிதத்தில் ஒரு பள்ளிக்கு 2 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 15 பள்ளிகளுக்கு 30 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள், அப்பணியிடங்கள் நிரப்பப்படும் நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு தற்காலிகமாகத் தோற்றுவிக்கப்படுகின்றன.

IV. 15 நடுநிலைப் பள்ளிகள் நிலை உயர்த்தப்படுவதால் நிலை இறக்கம் செய்யப்படும் 15 துவக்கப் பள்ளிகளில் ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.4500 என்ற ஊதிய விகிதத்தில் 15 துவக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்கள், அப்பணியிடங்கள் நிரப்பப்படும் நாளிலிருந்து ஓராண்டுக்கு தற்காலிகமாகத் தோற்றுவிக்கப்படுகின்றன. துவக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களைப் பொறுத்தவரையில், இப்பள்ளிகளுக்கு ரூ.5200–20200 + தர ஊதியம் ரூ.2800 என்ற ஊதிய விகிதத்தில் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டுள்ள இரண்டு இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் ஒரு இடைநிலை ஆசிரியர் பணியிடம் நிலை உயர்த்தப்படுகிறது.

V. தொடராச் செலவினமாக ரூ.8,27,75,280/– (ரூபாய் எட்டு கோடியே இருபத்தேழு இலட்சத்து எழுபத்தி ஐந்தாயிரத்து இருநூற்று எண்பது மட்டும்) இவ்வாணையின் இணைப்பு–II-இல் உள்ளவாறு ஒப்பளிக்கப்படுகிறது.

6. மேலே பத்தி 5–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

(i) <u>ஆதி திராவிடர் நலம்</u>

2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 ஆதி திராவிடர் நலன் – 277 – கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – KF – ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப்பள்ளிகளாக நிலை உயர்த்தல்.

**நிலையுயர்த்தப்படும் 9 ஆதி திராவிடர் நல பள்ளிகளுக்கான தொடரும் செலவினம் 2225 01 277 KF 01 சம்பளங்கள்**

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | ஊதிய விகிதம் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | தலைமை ஆசிரியர் (நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியரை உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியராக நிலை உயர்த்துதல் | ரூ.9300–34800 + தர ஊதியம் 4800 | 9 |
| 2. | பட்டதாரி ஆசிரியர் (புதிய பணியிடம்) | ரூ.9300–34800 + தர ஊதியம் 4600 | 18 |
| 3. | துவக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் (இடைநிலை ஆசிரியர் தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியராக நிலை உயர்த்துதல்) | ரூ.9300–34800 + தர ஊதியம் 4500 | 9 |

| தொடராச் செலவினம் | | |
|---|---|---|
| 05 அலுவலக செலவுகள் – 05 அறைகலன் (இழுவறையுடன் மேசை, கைப்பிடியுடன் நாற்காலி, பெஞ்சுடன் மாணவர் இருக்கை) (த.தொ.கு. 2225 01 277 KF 0554) | – | 19,66,968 |
| 19 இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல் (கணினி நகல் எடுக்கும் இயந்திரம்) ஆய்வக உபகரணங்கள் (த.தொ.கு. 2225 01 277 KF 1919 ) | – | 9,00,000 |
| 76 கணினியும் துணை பாகங்களும் – 01 வாங்குதல் (கணினி) ( த.தொ.கு. 2225 01 277 KF 7619 ) | – | 3,15,000 |
| 24 பொருள்களும் வழங்கலும் (விளையாட்டுக் கருவிகள், ஆய்வுக்கூட கருவிகள்) (த.தொ.கு. 2225 01 277 KF 2409 ) | – | 45,000 |
| 4225 – ஆதி திராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு – 01 – ஆதி திராவிடர் நலன் – 277 – கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II – மாநிலத் திட்டம் – JB - ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் கட்டடங்கள் கட்டுதல் – 16 பெரும்பணிகள் (கூடுதல் வகுப்பறை, ஆய்வுக்கூட கட்டிடம்) (த. தொ.கு. 4225 01 277 JB 1601) | – | 4,26,69,000 |
| மொத்தம் | – | 4,58,95,968 |

**(ii)** <u>பழங்குடியினர் நலம்</u>

2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 02 – பழங்குடியினர் நலன் – 277 – கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JY பழங்குடி இன மாணவர்கள் தங்கிப் பயிலும் நடுநிலை / உயர்நிலைப் பள்ளிகளை, உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல்.

**நிலையுயர்த்தப்படும் 6 அரசு பழங்குடியினர் பள்ளிகளுக்கான தொடரும் செலவினம்**
**2225 02 277 JY 01 சம்பளங்கள்**

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | ஊதிய விகிதம் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | தலைமை ஆசிரியர் (நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியரை உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியராக நிலை உயர்த்துதல் | ரூ.9300–34800 + தர ஊதியம் 4800 | 6 |
| 2. | பட்டதாரி ஆசிரியர் (புதிய பணியிடம்) | ரூ.9300–34800 + தர ஊதியம் 4600 | 12 |
| 3. | துவக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் (இடைநிலை ஆசிரியர் தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியராக நிலை உயர்த்துதல்) | ரூ.9300–34800 + தர ஊதியம் 4500 | 6 |

| <u>தொடராச் செலவினம்</u> | | |
|---|---|---|
| 05 அலுவலகச் செலவுகள் – 05 அறைகலன் (து.தொ.கு. 2225 02 277 JY 0556) | – | 13,11,312 |
| 19 இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல் (து.தொ.கு. 2225 02 277 JY 1911) | – | 6,00,000 |
| 76 கணினியும் துணை பாகங்களும் – 01 வாங்குதல் (து.தொ.கு. 2225 02 277 JY 7611) | – | 2,10,000 |
| 24 பொருள்களும் வழங்கலும் (து.தொ.கு. 2225 02 277 JY 2401) | – | 30,000 |
| 4225 – ஆதி திராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு – 02 – பழங்குடியினர் நலன் – 277 – கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநிலத் திட்டம் – JX பழங்குடியின மாணவர்கள் தங்கிப் பயிலும் நடுநிலை / உயர்நிலைப் பள்ளிகளை, உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல் – 16– பெரும்பணிகள் (து. தொ.கு. 4225 02 277 JX 1606) | – | 3,47,28,000 |
| மொத்தம் | – | 3,68,79,312 |

7. மேலே பத்தி 5–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு 'புதுத் துணைப்பணி' குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வரவு–செலவு பொது–1) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானிய கோரிக்கையில் இச்செலவினம் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையிலான காலத்திற்கு தேவையான நிதியினை சரியாகக் கணக்கிட்டு

1963 எதிர்பாரா செலவு நிதி விதிகளில் குறிப்பிட்டுள்ள அட்டவணை "A"யினை பூர்த்தி செய்து எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெற இவ்வரசாணையின் நகலுடன் நிதித் (வரவு–செலவு பொது–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்தினை 2015–2016ஆம் நிதி ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய விளக்கக் குறிப்பினை நிதித் (ஆதி (ம) பந) துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

8. மரச் சாமான்கள், கணினி நகல் எடுக்கும் இயந்திரம், கணினி, விளையாட்டுக் கருவிகள், ஆய்வுக்கூட கருவிகள் ஆகியவற்றிற்கு நடைமுறையிலுள்ள அரசு விதிகளைப் பின்பற்றி வாங்கி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலருக்கு வழங்க ஆதி திராவிடர் நல இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

9. மேலே பத்தி 5–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையில் கட்டுமானப் பணிகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையைப் பெற்று மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்களுக்கு வழங்க ஆதி திராவிடர் நல இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. நிலை உயர்த்தப்படும் பள்ளிகளுக்கான கட்டுமானப் பணிகள் அனைத்தும் தாட்கோ மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், இதற்கான செலவினம் பணமாக வழங்கப்படாமல் தாட்கோவில் கீழ்க்காணும் அலுவலர் பெயர் வைப்புத்தொகை கணக்குத் தலைப்பில் காசோலை / வரைவோலை மூலம் எதிர்வரவாக (Contra Credit) வரவு வைக்கப்படவேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது:–

> 8443–00 – உரிமையியல் வைப்புத்தொகைகள் – 800 பிற வைப்புத்தொகைகள் – BY தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வளர்ச்சி கழக வைப்புத் தொகைகள் – தாட்கோவின் வைப்புத் தொகைகள் (தாட்கோ)
> (த.தொ.கு. 8443 00 800 BY 0004) (Outgo)
> 8443 00 800 BY 000G) (Receipt))

10. கட்டுமானப் பணிகளை குறித்த காலக்கெடுவுக்குள் முடிக்க தாட்கோ மேலாண்மை இயக்குநர் அவர்களுடன் கலந்தாலோசித்து கால அட்டவணை ஒன்றினை தயார் செய்யும்படி ஆதி திராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். கட்டட கட்டுமானப் பணிகளின் முன்னேற்றத்தினை உன்னிப்பாக கண்காணிக்கவும், குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் கட்டடங்கள் கட்டி முடித்து ஆதி திராவிடர் நலத்துறையிடம் தாட்கோ ஒப்படைப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும்படியும் ஆதி திராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இதுகுறித்து தவறாமல் அரசுக்கு முன்னேற்ற அறிக்கையை அனுப்புமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் மற்றும் தாட்கோவின் மேலாண்மை இயக்குநர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கட்டுமானப் பணிகளின் விரைவு மற்றும் அதன் தரத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு தாட்கோ மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

11. இவ்வாணை வெளியிடப்பட்ட மூன்று மாதங்களுக்குள், நிலை உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கு, ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளவாறு மரச் சாமான்கள் வாங்கி வழங்கப்பட்டு, வழங்கப்பட்ட நாள் குறித்த விவரங்களுடன் அரசுக்கு அறிக்கை அனுப்புமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

12. நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டதால் நிலை உயர்த்தப்பட்ட தலைமையாசிரியருக்கும், ஏனைய ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும் சம்பளம் மற்றும் இதர படிகள் கருவூலத்திலிருந்து பெற்று வழங்கும் அதிகாரத்தினை சம்மந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியருக்கு அளித்து அரசு ஆணையிடுகிறது.

13. இவ்வாணை, அலுவல் சார்பற்ற எண். 4151/மைமஆபி /2016, நாள் 20.01.2016-இல் நிதித் துறையின் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது. மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1991 (ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்று).

(ஆளுநரின் ஆணைப்படி)

ப. அண்ணாமலை
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், ஆதி திராவிடர் நலன், சென்னை - 5.
இயக்குநர், பழங்குடியினர் நலன், சென்னை - 5.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை - 18.
மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர் / திருவள்ளூர் / சேலம் / திருப்பூர் /
காஞ்சிபுரம் / திருவண்ணாமலை / விழுப்புரம் / பெரம்பலூர்
மாவட்ட ஆதி திராவிடர் (ம) பழங்குடியினர் நல அலுவலர்,
வேலூர் / திருவள்ளூர் / சேலம் / திருப்பூர் /
காஞ்சிபுரம் / திருவண்ணாமலை / விழுப்புரம் / பெரம்பலூர்
சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்கள்
(ஆதி திராவிடர் நல இயக்குநர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை - 8.
மாவட்டக் கருவூல அலுவலர்,
வேலூர் / திருவள்ளூர் / சேலம் / திருப்பூர் /
காஞ்சிபுரம் / திருவண்ணாமலை / விழுப்புரம் / பெரம்பலூர்
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை - 18 / 35 (பெயரில்)

நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை - 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்
அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை - 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை
அரசுச் செயலர் அவர்களின் முதுநிலைத் தனிச் செயலாளர், சென்னை - 9.
நிதித் (ஆதி (ம) பந / வரவு-செலவு பொது I /
வரவு-செலவு பொது II / மைமஆபி) துறை, சென்னை - 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

சு. வெங்கடேசன் 21/1/2016
பிரிவு அலுவலர்
21/1/16

## இணைப்பு – 1

**(அரசாணை (நிலை) எண்.13, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 7) துறை, நாள்: 21.01.2016)**

**2015–2016 ஆம் கல்வியாண்டில் உயர்நிலைப்பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் ஆதி திராவிடர் நல/அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளிகளின் பட்டியல்**

| வ.எண் | பள்ளி அமைந்துள்ள மாவட்டம் | | பள்ளியின் முகவரி |
|---|---|---|---|
| 1. | வேலூர் | 1. | ஆதி திராவிடர் நல நடுநிலைப்பள்ளி, அம்மனூர் |
| | | 2. | ஆதி திராவிடர் நல நடுநிலைப்பள்ளி, அம்மணாங்குப்பம் |
| 2. | திருவள்ளூர் | 3. | ஆதி திராவிடர் நல நடுநிலைப்பள்ளி, மதுரவாயல் |
| 3. | சேலம் | 4. | ஆதி திராவிடர் நல நடுநிலைப்பள்ளி, சிக்கனம்பட்டி |
| | | 5. | அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளி, தேக்கம்பட்டு |
| 4. | திருப்பூர் | 6. | ஆதி திராவிடர் நல நடுநிலைப்பள்ளி, அம்மாபட்டி |
| 5. | காஞ்சிபுரம் | 7. | ஆதி திராவிடர் நல நடுநிலைப்பள்ளி, மேல்ஒட்டிவாக்கம் |
| | | 8. | ஆதி திராவிடர் நல நடுநிலைப்பள்ளி, அனகாபுத்தூர் |
| 6. | திருவண்ணாமலை | 9. | ஆதி திராவிடர் நல நடுநிலைப்பள்ளி, கேட்டவரம்பாளையம் |
| | | 10. | அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளி, பட்டரைக்காடு |
| | | 11. | அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளி, கோவிலாண்டூர் |
| | | 12. | அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளி, ஆட்டியனூர் |
| 7. | விழுப்புரம் | 13. | ஆதி திராவிடர் நல நடுநிலைப்பள்ளி, களத்தூர் |
| | | 14. | அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளி, மூலக்காடு |
| 8. | பெரம்பலூர் | 15. | அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளி, மலையாளப்பட்டி |

ப. அண்ணாமலை
அரசு செயலாளர்

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர் 2/11/2016

## இணைப்பு – 2

( அரசாணை (நிலை) எண்.13, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 7) துறை, நாள் : 21.01.2016)

நிலையுயர்த்தப்படும் 15 பள்ளிகளுக்கான தொடரும் செலவினம்

( ரூபாயில் )

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | திருத்தப்பட்ட ஊதிய விகிதம் | சராசரி ஊதியம் | தர ஊதியம் | அகவிலைப்படி @ 119% | வீட்டு வாடகைப் படி | மருத்துவப் படி | மொத்தம் | ஒரு ஆண்டிற்கான மொத்த செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | தலைமை ஆசிரியர் (உயர்நிலைப்பள்ளி) | 9300–34800 | 22050 | 4800 | 31952 | 1400 | 100 | 60302 | 723624 |
| 2. | தலைமை ஆசிரியர் (நடுநிலைப்பள்ளி) | 9300–34800 | 22050 | 4700 | 31833 | 1400 | 100 | 60083 | 720996 |
| ஒரு பணியிடத்திற்கான ஊதிய வித்தியாசம் | | | | | | | | | 2628 |
| 15 பணியிடங்களுக்கான ஊதிய வித்தியாசம் | | | | | | | | | 39420 |
| 3. | பட்டதாரி ஆசிரியர் | 9300–34800 | 22050 | 4600 | 31714 | 1400 | 100 | 59864 | 718368 |
| 30 பணியிடங்களுக்கான ஊதியம் | | | | | | | | | 21551040 |
| 4. | துவக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் | 9300–34800 | 22050 | 4500 | 31595 | 1400 | 100 | 59645 | 715740 |
| 5. | இடைநிலை ஆசிரியர் | 5200–20200 | 12700 | 2800 | 18445 | 1400 | 100 | 35445 | 425340 |
| ஒரு பணியிடத்திற்கான ஊதிய வித்தியாசம் | | | | | | | | | 290400 |
| 15 பணியிடங்களுக்கான ஊதிய வித்தியாசம் | | | | | | | | | 4356000 |

| | | |
|---|---|---|
| | 15 உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் + 30 பட்டதாரி ஆசிரியர் + 15 துவக்கப்பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களுக்கான ஒரு ஆண்டிற்கான தொடரும் செலவினம் (ரூ.39,420/– + ரூ.2,15,51,040/– + ரூ.43,56,000/–) | 2,59,46,460 |

**<u>நிலையுயர்த்தப்படும் 15 பள்ளிகளுக்கான தொடராச் செலவினம்</u>**

**<u>ஆதி திராவிடர் நலப் பள்ளிகள்</u>**

| வ.எண். | பொருட்கள் | எண்ணிக்கை | அலகு விலை (ரூ) | மொத்தத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1. | இழுவறையுடன் கூடிய மேசை | 2 | 3680 | 7,360/– |
| 2. | கைப்பிடியுடன் கூடிய நாற்காலி | 2 | 1796 | 3,592/– |
| 3. | மாணவர்களுக்கான இருக்கையுடன் கூடிய மேசை | 30 | 6920 | 2,07,600/– |
| 4. | கணினி நகல் எடுக்கும் இயந்திரம் | 1 | 50000 | 50,000/– |
| 5. | கணினி | 1 | 35000 | 35,000/– |
| 6. | விளையாட்டு உபகரணங்கள் | | 5000 | 5,000/– |
| 7. | ஆய்வக உபகரணங்கள் | | 50000 | 50,000/– |
| 8. | 2 புதிய வகுப்பறைகள் கட்டுதல் | 2 | | 19,52,000/– |
| 9. | ஆய்வகக் கட்டடம் கட்டுதல் | 1 | | 21,89,000/– |
| 10. | சுற்றுச்சுவர் கட்டுதல் | 1 | 600000 | 6,00,000/– |
| | மொத்தம் | | | 50,99,552/– |
| | 9 பள்ளிகளுக்கான தொடராச் செலவினம் | | | 4,58,95,968/– |

**அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள்**

| வ.எண். | பொருட்கள் | எண்ணிக்கை | அலகு விலை (ரூ) | மொத்தத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1. | இழுவறையுடன் கூடிய மேசை | 2 | 3680 | 7,360/– |
| 2. | கைப்பிடியுடன் கூடிய நாற்காலி | 2 | 1796 | 3,592/– |
| 3. | மாணவர்களுக்கான இருக்கையுடன் கூடிய மேசை | 30 | 6920 | 2,07,600/– |
| 4. | கணினி நகல் எடுக்கும் இயந்திரம் | 1 | 50000 | 50,000/– |
| 5. | கணினி | 1 | 35000 | 35,000/– |
| 6. | விளையாட்டு உபகரணங்கள் | | 5000 | 5,000/– |
| 7. | ஆய்வக உபகரணங்கள் | | 50000 | 50,000/– |
| 8. | 2 புதிய வகுப்பறைகள் கட்டுதல் | 2 | | 24,73,000/– |
| 9. | ஆய்வகக் கட்டடம் கட்டுதல் | 1 | | 27,15,000/– |
| 10. | சுற்றுச்சுவர் கட்டுதல் | 1 | 600000 | 6,00,000/– |
| | மொத்தம் | | | 61,46,552/– |
| | 6 பள்ளிகளுக்கான தொடராச் செலவினம் | | | 3,68,79,312/– |

15 பள்ளிகளுக்கான மொத்த தொடராச் செலவினம் – ரூ. 8,27,75,280/–

ப. அண்ணாமலை
அரசு செயலாளர்

/உண்மை நகல்/

த வெங்கடேசன் 2/11/2016
பிரிவு அலுவலர்

2/11/16